கூடுதல் மகிளா நீதிமன்றம் (நீதித்துறை நடுவர் நிலை),

திருவாரூர்.

CC.No.11/2020

2024-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 24 -ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் சாட்சி அ.சா.1- ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | வித்யா | வயது | 35 |
| கணவர் பெயர் | ராஜா | ஜாதி | |
| தொழில் | வீட்டுக்குடித்தனம் | மதம் | |
| ஊர் | வெண்ணவாசல் | தாலுக்கா | |

( எதிரிகள் 2,3 ஆஜரில் உள்ளார். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் முன்னிலை)

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

1) நான் தற்போது வெண்ணவாசல் கீழத்தெருவில் வசித்து வீட்டுக்குகுடித்தனம் ஆவேன். ஆஜர் எதிரிகளை தெரியும். எதிரிகள் எனது பக்கத்து வீட்டுக்காரர்கள் ஆவார்கள். கடந்த 20 வருடங்களாகவே எனது அப்பா வீட்டிற்கும் எதிரிகளுக்கும் இடையே இடத் தகராறு இருந்து வந்தது. கடந்த 05.08.2017ம் தேதி மாலை 4.30 மணியளவில் எதிரிகளான சிந்துஜா, கமலா, சித்திரைகுமார் மற்றும் சந்திரா ஆகியோர் வீடு புகுந்து என்னை சரமாரியாக தாக்கினார்கள். என்னை எனது வீட்டிற்குள் குச்சிகாரி, தேவடியா என்று தகாத வார்த்தைகளால் திட்டி என் முடியை பிடித்து இழுத்து அடித்தார்கள். எனது வயிற்றிலேயே சிந்து என்பவர் மிதித்தார். இந்த ஊரிலேயே நீ இருக்க கூடாது. இருந்தால் நான் கொன்று விடுவேன் என்று சிந்து என் முடியை பிடித்து இழுத்து வந்தார்.

2) ஊரை காலி செய்து விட்டு சென்று விடுங்கள் என்று கூறினார். எதிரிகள் இதுநாள் வரை தகாதவார்த்தைகளால் திட்டியும், அடித்தும் கொலை மிரட்டல் விடுத்து வருகின்றனர். இதநாள் நான் உயிருக்கு பாதுகாப்பு இன்றி இருக்கிறேன். எதிரிகைகள் என்னை வயிற்றில் தாக்கியதால் ரத்த கசிவும், வாந்தியும் ஏற்பட்டது. அதன் காரணமாக நான் திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சையில் 4 நாட்கள் இருந்தேன். இது சம்பந்தமாக சம்பவத்தன்று இரவு காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும்

ஆவணமான புகார் மனு நானே எழுதிக் கொடுத்தது தான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். ( **புகார் அ.சா.ஆ. 1 ஆக குறியிடுசெய்யப்படுகிறது.** )போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

1) நான் 12ம் வகுப்பு படித்துள்ளேன். புகார் நான் எழுதியது என்றால் சரிதான். புகாரில் எந்த தேதியில், எந்த நேரத்தில் சம்பவம் நடந்தது என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். 3 வது எதிரியால் விஜயா, ராஜா, சூர்யா, ஆதவன், சயத், விஜய் ஆகியோர்கள் மீது புகார் கொடுக்கப்பட்டு குற்ற எண். 202/2017 சட்ட பிரிவுகள் 147, 148, 294(b), 324, 506(ii) IPC ன் படி வழக்கு பதிவு செய்யப்பட்டு அதற்காக நான் கொடுத்த எதிர் புகார் தான் இந்த வழக்கு என்றால்சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதியான 05.08.2017 ம் தேதி நான் மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை எடுத்துக் கொண்டேன் என்றால் சரிதான். நான் அன்றைய தினம் சிகிச்சையில் சேரவில்லைஎ ன்றும் மறுநாள் 06.08.2017 ம் தேதி காலை 8.15 மணிக்கு தான் சிகிச்சையில் சேர்ந்தேன் என்றால் சரிதான்.

2) எனது ஊரான வெண்ணவாசலில் இருந்து 1 கி.மீ தூரத்தில் உள்ள அத்திக்கடை என்ற ஊரில் அரசு மருத்துவமனை உள்ளது என்றால் சரிதான். திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை எனது ஊரில் இருந்து 15 கி.மீ தொலைவில் உள்ளது என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் கூறியுள்ள சங்கதிகளை போலிஸ் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். ஆஜர் எதிரிகள் இருவருமே அம்மாபேட்டை அருகில் உள்ள சாலியமங்கலம் என்ற ஊரில் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். நான் உரிமையியல் நீதிமன்றத்தில் ஆஜர் எதிரிகள் மீது இட பிரச்சனை தொடர்பாக வழக்கு எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

3) நான் முதல் விசாரணையில் குறிப்பாக எனது வீட்டிற்குள் ஆஜரில் உள்ள எதிரிகள் மற்றும் ஆஜரில் இல்லாத 1 மற்றும் 4 எதிரிகள் புகுந்து என்னை தகாத வார்த்தைகளால் திட்டி முடியை பிடித்து அடித்ததாக நான் போலிஸ்விசாரணையில் கூறியுள்ளேனாஎன்றால் கூறியுள்ளேன். நான் அவ்வாறு போலிஸ் விசாரணையில் கூறவில்லை என்றும், தற்போது வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1 வது எதிரி என்னை வயிற்றில் மிதித்ததாக நான் போலிஸ் விசாரணையிலும், மருத்துவரிடமும் கூறினேன் என்றால் சரிதான். நான் அவ்வாறு கூறவில்லைஎன்றும், தற்போது வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. எதிரிகள் என்னை கொன்று விடுவதாக நான் கூறியுள்ள சங்கதி பொய் என்றால் சரியல்ல. எதிரிகள்

என்னை திட்டி தாக்கி, கொலை மிரட்டல்விடுத்ததாக கூறப்பட்டுள்ள சங்கதிகள் பொய் என்றால் சரியல்ல. எதிரிகள் என்னை தாக்கியதன் காரணமாக எனக்கு வயிற்றில் வலி ஏற்பட்டு வாந்தி எடுத்ததாக நான் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. ரத்த போக்கு அதிகமாக இருந்தது. இடப்பிரச்சனை சம்பந்தமாக முன் விரோதம் இருந்த காரணத்தினால் எதிரிகள் மீது பொய் புகார் கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவம் எதுவும் நடைபெறாத காரணத்தினால் தான் அதற்கு மறுநாள் நான் சிகிச்சையில் சேர்ந்தேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு சம்பவத்திற்கும் எதிரிகளுக்கும் யாதொரு தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை**

Typed under My dictation in Open Court read over to Witness and admitted by the witness to be correct.

Sd/-
S. Cintha, B.A.,B.L(Hons).,
Judicial Magistrate,
Additional Mahila Court,
Tiruvarur.

கூடுதல் மகிளா நீதிமன்றம் (நீதித்துறை நடுவர் நிலை),

திருவாரூர்.

CC.No.11 /2020

2024-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 24 -ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் சாட்சி அ.சா. 2 - ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | விஜய் | வயது | 31 |
| தந்தை பெயர் | ஜெயபால் | ஜாதி | |
| தொழில் | மெட்ரோ ரயில்வே ஊழியர் | மதம் | |
| ஊர் | சென்னை | தாலுக்கா | |

( எதிரிகள் 2, 3 ஆஜரில் உள்ளார். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் முன்னிலை)

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

1) நான் தற்போது வெண்ணவாசல் கீழத்தெருவில் வசித்து மெட்ரோ ரயில்வே ஊழியராக பணியாற்றி வருகிறேன். அ.சா 1 வித்யா எனது அக்கா ஆவார். ஆஜர் 2, 3 எதிரிகள் மற்றும் 1, 4 எதிரிகள் எனது பக்கத்து வீட்டுக்காரர்கள் என்றால் சரிதான். நான் கடந்த 05.08.2017 ம் தேதி எனது வீட்டின் நிலக்கதவு வைக்கும் விழாவிற்காக சென்னையில் இருந்து எனது வீட்டிற்கு வந்திருந்தேன். நான் எனது வீட்டில் இருந்து வெளியே வந்த போது எதிரிகள் எங்கள் வீட்டை நோக்கி கற்கலை எரிந்தர்கள்.1வது எதிரி அ.சா 1 யை வயிற்றில் மிதித்து கொன்று விடுவதாக மிரட்டினார். உனது வம்சத்தை அழித்து விடுவாதாக கூறினார். ஆஜர் 2, 3 எதிரிகள் மற்றும் 4 வது எதிரி அ.சா 1 மற்றும் எனது அப்பாவை அடித்தார்கள். கட்டை, விளக்கமாறு ஆகியவற்றால் அடித்தார்கள். சித்திரைகுமார் என்பவர் வாலை எடுத்துக் கொண்டு வந்து எனது அப்பாவை வெட்டவந்தார். நான் எனது அக்காவின் குழந்தைகளை பாதுகாப்பதற்காக அவர்களை கொல்லை புரம் அழைத்து சென்றேன்.

2) அங்கு பெயர் தெரியாத அடையாளம் தெரிந்த 10 நபர்கள் கையில் ஆயுதங்களுடன் எங்களை துரத்தி அடித்தனர். சம்பவம் நடந்துக் கொண்டிருக்கும் போதே போலிசார் வந்தனர். இது சம்பந்தமாக போலிசார்என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் முதல் விசாரணையில் கூறியுள்ள சிந்து என் அக்காவை வயிற்றில் உதைத்தாகவும், ஆஜர் 2, 3 எதிரிகள் மற்றும் 4 வது எதிரி அ.சா 1 மற்றும் எனது அப்பாவை அடித்ததாகவும், கட்டை, விளக்கமாறு ஆகியவற்றால் அடித்ததாகவும், சித்திரைக்குமார் வாளை எடுத்து வந்து எனது அப்பாவை வெட்ட வந்ததாவும் சொல்லப்படும் சங்கதிகள் பொய்யான சங்கதிகள் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் கூறியுள்ள சங்கதிகள் வழக்கிற்காக பின்னிட்டு கூறியுள்ளவை என்றால் சரியல்ல. கல்லை வீசியதால் எனது நண்பர் அப்பாஸ்சுக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரிதான். எனது நண்பர் அப்பாஸ் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக் கொண்டார என்றால் இல்லை. எனது நண்பரை போலிசார் விசாரணை செய்தார்களா என்றால் இல்லை. விஜயா, ராஜா, சூர்யா, ஆதவன், செயத், விஜய் ஆகியோர்கள் சேர்ந்து ஆஜர் எதிரிகளை தாக்கியதன் காரணமாக அவர்கள் கொடுத்த புகாரின் காரணமாக எனது அக்கா இந்த வழக்கினை தாக்கல் செய்து நான் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் ஆஜர் எதிரிகளுக்கும் யாதொரு தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை**

Typed under My dictation in Open Court read over to Witness and admitted by the witness to be correct.

Sd/-
S. Cintha, B.A.,B.L(Hons).,
Judicial Magistrate,
Additional Mahila Court,
Tiruvarur.

கூடுதல் மகிளா நீதிமன்றம் (நீதித்துறை நடுவர் நிலை),

திருவாரூர்.

CC.No.11/2020

2024-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 24 -ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் சாட்சி அ.சா. 3- ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | தியாகராஜன் | வயது | 34 |
| தந்தை பெயர் | ஜெயராமன் | ஜாதி | |
| தொழில் | விவசாயம் | மதம் | |
| ஊர் | வெண்ணவாசல் | தாலுக்கா | |

( எதிரிகள் 2,3 ஆஜரில் உள்ளார். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் முன்னிலை)

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் தற்போது வெண்ணவாசல் கீழத்தெருவில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா. 1 மற்றும் ஆஜர் எதிரிகள் எனது தெருக்காரர்கள். அ.சா. 1ன் பக்கத்து வீட்டில் ஆஜர் எதிரிகள் வசிக்கிறார்கள். நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகசரில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையதுதான். ( **அந்த கையொப்பம் அ.சா.ஆ. 2 ஆக குறியிடுசெய்யப்படுகிறது**) கடந்த 06.08.2017 ம் தேதி காலை 6.30 மணியளவில் நானும், எனது நண்பரான விக்னேஸ்சும் அ.சா 1 ன் வீட்டை தாண்டி டீக்கடைக்கு சென்று கொண்டிருந்த போது, ஏற்கனவே அ.சா1க்கும், எதிரிகளுக்கும் இடையே நடந்த தகராறு தொடர்பாக போலிசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு எங்கள் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். அதில் நானும் விக்னேஷ்சும் சாட்சிகளாக இருந்து கையொப்பம் செய்தோம். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் எனது கிராமத்தில் தற்போது எதுவும் பொருப்பில்இருக்கிறேனா என்றால் இல்லை. ஊரில் எதுவும் பிரச்சனை என்றால் காவல் நிலையம் செல்வது உண்டு என்றால் சரிதான். நான் கையொப்பம் செய்த பேப்பரில் என்ன எழுதப்பட்டிருந்தது என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும். நான் கையொப்பம் செய்த பேப்பரில் என்ன விபரம் எழுதப்பட்டிருந்தது என்றால் அ.சா 1 யை ஆஜர் எதிரிகள் அடித்தது தொடர்பாக எழுதப்பட்டிருந்தது. எதிர் வழக்கிலும் நானும், விக்னேஷ்சும் பார்வை மகசரில்

**கையொப்பம் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. போலிசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அ.சா 1 சொல்லிக் கொடுத்ததன் அடிப்படையில்நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.**

**மறுவிசாரணை - இல்லை**

Typed under My dictation in Open Court read over to Witness and admitted by the witness to be correct.

Sd/-
S. Cintha, B.A.,B.L(Hons).,
Judicial Magistrate,
Additional Mahila Court,
Tiruvarur.